தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15 – மலர் 21 – இதழ் 05 – செப்டம்பர் 2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள்...

நாங்கள் வந்து விட்டோம்

முற்றக் கச்சேரி 2.0 ஆரம்பம்

■ பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

செப்டம்பர் 2019

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அயராது உழைத்து வெற்றிகள் பல பெற்று வரும் உங்களுடன் முற்றத்தின் வாயிலாக எனது கருத்துக்களை மாதந்தோறும் பகிர்ந்து கொள்வது எனக்கு பெருமகிழ்ச்சியாக உள்ளது. பெண்களின் ஒற்றுமைக்கும் அவர்களின் உழைப்பிற்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் நம் மகளிர் சுய உதவிக் குழு இயக்கமானது இன்று மிகப் பெரிய அளவில் வெற்றிகளைப் பெற்று வருவது சிறப்பிற்குரியது.

அவ்வகையில், நம் தமிழக அரசும் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டியும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக அத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியும் வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அரசின் திட்டங்களை நீங்களும் முழுமையாகப் பயன்படுத்தி, மற்றவர்களுக்கும் அத்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினால் மட்டுமே அனைவரும் இதனால் முழுமையாகப் பயன் பெற முடியும். ஆகவே, அரசால் ஏற்படுத்தப்படும் மகளிருக்கான அனைத்துத் திட்டங்களும் முழுமையாவது உங்களின் கைகளில்தான் உள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது

இன்றைய சூழ்நிலையில் தொழில் நடவடிக்கைகளில் மட்டுமல்லாமல் விவசாயத்திலும் சுய உதவிக் குழு மகளிர் தங்களுடைய முழுமையான பங்களிப்பை அளித்து வருகின்றனர். அவர்களின் செயல்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் இயற்கை முறையிலே உற்பத்தி செய்த சுய உதவிக் குழு மகளிரின் வேளாண் உற்பத்திப் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கிப் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் வரும் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் வேளாண் பொருட்கள் விற்பனைச் சந்தை நடைபெற்று வருகிறது.

அதனைத் தொடர்ந்து, மாடித் தோட்டம் அமைத்தல், சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வகையில் வேளாண் பொருட்களை எவ்வகையில் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட பயிற்சிகளும் இவ்வலுவலக வளாகத்தில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சியில் சுய உதவிக் குழு மகளிர் மட்டுமல்லாமல் அனைத்து தரப்பு மகளிரும் பங்கு பெறலாம். இந்த அரிய வாய்ப்பை அனைத்து மகளிரும் பயன்படுத்தி பயன் பெற்றால்தான் இப்பயிற்சியின் நோக்கம் முழுமை பெறும்.

மேலும், சுய உதவிக் குழு மகளிரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறித்து அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ளும் வகையிலும், அவ்வுற்பத்திப் பொருட்களுக்குரிய, நியாயமான விலை கிடைக்கும் நோக்கிலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பொருட்டும் விற்பனைக் கண்காட்சியானது அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இக்கண்காட்சியில் அனைத்து சுய உதவிக் குழு மகளிரும் பங்கு பெற்று தங்களின் பொருட்களை நேரடியாக விற்பனை செய்து பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பம்.

இயற்கைக்கு மாறாக செயல்பட்டு, நம் சுற்றுச்சூழலை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை நம் தமிழக அரசு தடை செய்து ஆணையிட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள். நம்மால் வீசி எறியப்படும் பிளாஸ்டிக் பைகள் மக்குவதற்கு பல நூறு ஆண்டுகள் ஆகும். இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதோடு பல்வேறு பிரச்சனைகளும் ஏற்படுகின்றன. எனவே, பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை நாம் முற்றிலும் தவிர்க்க வேண்டும். பொருட்களை வாங்க கடைகளுக்குச் செல்லும் போது துணி, சணல் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட பைகளையே கொண்டு செல்வது சிறப்புக்குரியது.

சுய உதவிக் குழுவில் பங்கு பெற்றுள்ள நீங்கள் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை முற்றிலும் தவிர்ப்பதே சாலச் சிறந்தது. இதனால் உங்கள் சுற்றத்தாரும் இதனைக் கடைப்பிடிப்பார்கள். அதன் மூலம் நம் வீடும், நாடும் சுற்றுச்சூழல் மாசிலிருந்து விடுபட்டு நலம் பெறும்.

``தவறாமல் கடைபிடியுங்கள், மறவாமல் கற்றுக் கொடுங்கள்''

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,



மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

நீதி வழுவாமல் நன்மைகளை விரும்பிச் செய்து, பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகம் போற்றிக் கொண்டாடும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுதந்திர தின உரை

05

“தியாகத்திற்கும் அமைதிக்கும் அடையாளமாகத் திகழும் புனிதமான தேசியக் கொடியை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடனும், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடனும், மூன்றாவது முறையாக கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றியதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.”

-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்

உள்ளே...

அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் 08

DDU-GKY திட்டத்தில் இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம் 09

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் சுதந்திர தின விழாக் கொண்டாட்டம் 10

தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்ட அறிமுகம் 11

மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 12

மாவட்டச் செய்திகள் 13

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் 16

பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்! பூமியைக் காப்போம்! 18

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் 20

உயிர் காக்கும் ரத்த தானம் 25

முற்றக் கச்சேரி 2.0 26

மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களைப் பெற்ற மகளிரின் வெற்றிக் கதைகள் 28

முதன்மைப் பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி 33

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com
protncdw1@gmail.com

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 21
இதழ் 05
செப்டம்பர் 2019
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

  திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப.,
  மேலாண்மை இயக்குநர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
  முதன்மை செயல் அலுவலர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
  முதன்மை செயல் அலுவலர்,
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
  செயல் இயக்குநர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

  எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

  கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

  பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

  ச. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

  அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

  கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

சுதந்திரத்தைப் பாதுகாப்போம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

நாடெங்கும் எழுபத்தி மூன்றாவது சுதந்திர தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டிருந்த இந்த நாடு பல தியாகிகளின் முயற்சியாலும், எழுச்சி மிக்க மக்கள் போராட்டங்களாலும் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

நாம் சுதந்திரத்தைப் பெற்று, நமக்குத் தேவையான அரசியல் சட்டத்தை நாமே வகுத்துக் கொண்டு, இச்சுதந்திர தேசத்தில் நமக்கான ஜனநாயக முறைப்படி, நம் நாட்டை வழிநடத்திச் செல்ல நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நம் நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களை முறையாக செயல்படுத்தியும் வருகின்றனர். சுதந்திர இந்தியாவில் இன்றைய அபரிமிதமான அறிவியல் வளர்ச்சிகளையும், வலுவான கட்டமைப்புகளையும், தொழில் மற்றும் கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் கண்டு உலகின் பிற நாடுகள் பிரமிப்பில் ஆழ்ந்துள்ளன.

ஒரு நாட்டின் வளர்ச்சியே அந்நாட்டு மக்களின் உணவு, உடை, பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு, கருத்துரிமை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இவைகள் அனைத்திற்கும் ஆதாரமாய் விளங்குவது சுதந்திரம் என்றால் அது மிகையாகாது. சுதந்திரக் காற்றை இன்று சுவாசித்துக் கொண்டிருக்கிற நாம், இந்த சுதந்திரத்தைப் பெற்றுத் தர பாடுபட்ட தலைவர்கள் மற்றும் தியாகிகள் வகுத்துக் கொடுத்த வழிமுறைகளையும், கொள்கைகளையும் பின்பற்றி செயல்படுத்துவதுதான் அச்சுதந்திரத்தைப் பேணிக் காப்பதாகும். அதுவே நாம் அத்தியாகிகளுக்கு செலுத்தும் நன்றிக் கடன்களாகவும் இருக்கும்.

ஒளி படர்ந்தவுடன் இருள் அகல்வதைப் போன்று நம் மனதில் உள்ள இருள் அகல வேண்டுமாயின் சுதந்திர ஒளி நாட்டின் எட்டுத் திக்கும் பரவட்டும்! அனைத்து குடிமக்கள் மீதும் சமமாக ஒளிரட்டும்! முற்றம் சார்பாக அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

73வது சுதந்திர தின விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுதந்திர தின உரை

சென்னை தலைமைச் செயலகம் கோட்டைக் கொத்தளத்தில் 15.08.2019 அன்று நடைபெற்ற 73வது சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திர தின விழா உரையிலிருந்து சில தகவல்கள் இங்கே பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

“தியாகத்திற்கும் அமைதிக்கும் அடையாளமாகத் திகழும் புனிதமான தேசியக் கொடியை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடனும், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடனும், மூன்றாவது முறையாக கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றியதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நாம் அனைவரும் எந்தவித பேதமும் இன்றி கொண்டாட வேண்டிய உணர்வுபூர்வமான திருவிழாதான் சுதந்திர தின விழா. அண்ணல் காந்தியடிகள் சுதந்திர போராட்டத்திற்குத் தலைமை ஏற்று, அயலாரை அறவழியில் எதிர்த்துப் போராடி, நம் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார்.

தியாகிகளின் தியாகங்களைப் போற்றிடும் வகையிலும், எதிர்கால தலைமுறையினர் இவர்களது அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து போற்றும் வகையிலும், தமிழ்நாடு அரசு இவர்களுக்கு 35 மணி மண்டபங்களையும், முக்கிய இடங்களில் திருவுருவச் சிலைகளையும் நிறுவியுள்ளதுடன், அரசு சார்பில் விழாக்களும் நடத்தி சிறப்பித்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை மட்டுமே செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த நவம்பர் மாதம் கஜா புயலின் காரணமாக டெல்டா மாவட்டங்களில் பெருமளவு பொருட்சேதம் ஏற்பட்டது. ஆனால், தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால், மனித உயிர்கள் பெருமளவு காப்பாற்றப்பட்டன. புயலுக்குப் பின் அரசு இயந்திரம் முழுவீச்சில் செயல்பட்டதன் காரணமாக, வெகு விரைவில் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடிந்தது. மறுவாழ்வுப் பணிகள் அப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும், அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பெட்டகம் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் முதன்முறையாக வழங்கப்பட்டது. இப்பணிகளில் இரவு பகல் பாராது பாடுபட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் மீண்டும் ஒரு முறை நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்னை நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையால், தற்போது மீஞ்சூரிலும், நெம்மேலியிலும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மேலும், நெம்மேலியில் ஆயிரத்து 259 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கடல்நீரை குடிநீராக்கும் மற்றொரு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நான் அடிக்கல் நாட்டி, பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதே போன்று, பேரூரில் 6 ஆயிரத்து 78 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

2003ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைத் தொடங்கி, அதனைத் தீவிர இயக்கமாக செயல்படுத்தியதன் விளைவாக, நிலத்தடி நீரின் அளவு உயர்ந்தது. இந்தத் திட்டத்தினை முழுவீச்சுடன் செயல்படுத்திட மாண்புமிகு அம்மாவின் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு மக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கழிவு நீரை மறு சுழற்சி மூலமாக தொழிற்சாலைகளுக்கு வழங்கும் முறை 1993ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு, தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. அதே போன்ற சுத்திகரிப்பு நிலையங்கள் கோயம்பேட்டிலும், கொடுங்கையூரிலும் நிறுவப்பட்டு, விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ளன.

பல்வேறு கோணங்களில் தண்ணீர் பிரச்சனைக்கு தீர்வு காண நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம், தமிழ்நாட்டில் கிடைக்கும் நீரில் ஒரு துளி நீரைக்கூட வீணாக்கக் கூடாது என்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த கவனத்துடன் செயலாற்றி வருகிறது. இதை சரியான முறையில் நிறைவேற்றும் வகையிலும், நீராதாரத்தை முறையாக சேமித்து பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உரிய முறையில் ஒருங்கிணைக்கும் வகையிலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடிமராமத்து திட்டத்தை இணைத்து, 'தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்' என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கத்தை 7.8.2019 அன்று நான் தொடங்கி வைத்தேன். மாண்புமிகு அம்மா அவர்களால், தமிழ்நாடு 'மின்மிகை மாநிலமாக' எவ்வாறு உருவாக்கப்பட்டதோ, அதே போன்று இந்த இயக்கத்தின் மூலம் தமிழ்நாடு 'நீர் வளம் மிக்க மாநிலமாக' விரைவில் உருவாகும். இத்திட்டங்களின் மூலம், இனி வருங்காலத்தில் பருவமழை பொய்த்தாலும், தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இயக்கத்திற்கு மக்கள் தங்கள் ஒத்துழைப்பை பெருமளவு நல்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டும் வகையிலும், தமிழ்நாட்டு மக்களின் நலனை பாதுகாக்கும் வகையிலும், பல்வேறு சட்டப் போராட்டங்கள், கோரிக்கைகள் ஆகியவற்றின் மூலம், காவேரி நீர் மேலாண்மை ஆணையமும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவும் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. பல்லாண்டு காலமாக தீர்வு காணப்படாமல் இருந்த காவேரி பிரச்சனைக்கு, நிரந்தரத் தீர்வு கண்டது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். தற்போது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள 'மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பிரச்சனை தீர்ப்பாயம்' நடைமுறைக்கு வந்தாலும்கூட, ஏற்கனவே உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட இவ்விரு அமைப்புகளும் தொடர்ந்து செயல்படும்.

மேலும், பல ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வந்த கோரிக்கையின் அடிப்படையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழில் முதன் முறையாக பெறப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஆம் ஆண்டுக்குள் எய்தப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாடு உலக அரங்கில் வளர்ச்சிப் பாதையில் சென்றிட மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகின்றது. இந்த நோக்கத்தினை செயல்படுத்தும் விதமாக பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகின்றது.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ், புதிய பயிர்களையும், பகுதிகளையும் அறிவிக்கை செய்து, இத்திட்டத்தை கூடுதல் பரப்பளவில், அதிக வேளாண் பெருமக்கள் பலன் பெறும் வகையில், இந்த ஆண்டு ரூபாய் 634 கோடியே 74 லட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக 5 ஆயிரத்து 410 கோடியே 67 லட்சம் ரூபாய் இழப்பீட்டு நிதியாக பெற்றுத் தந்துள்ளது.

விரைவில் அழுகும் வேளாண் பொருட்களை பாதுகாக்கும் வகையில், ஏற்கனவே 10 மாவட்டங்களில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ள 'விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்', மேலும் 5 மாவட்டங்களில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

2018ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு 186 கோடியே 25 லட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கியது.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பாதுகாவலனாக விளங்கும் பனை மரங்களை அதிக அளவில் வளர்க்கும் வகையில், இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் 2.5 கோடி பனை விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த நவீன கால்நடைப் பூங்கா சேலம் மாவட்டம் தலைவாசலில் 900 ஏக்கர் பரப்பளவில் நிறுவிட நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

2015ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்த ஆண்டு நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 லட்சத்து 50 ஆயிரம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 3 லட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு அம்மா அவர்களும், அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக, தற்போது தமிழ்நாட்டின் சராசரி மின் தேவை 15 ஆயிரத்து 600லிருந்து 16 ஆயிரத்து 100 மெகா வாட்டாக உள்ள போதிலும், 18 ஆயிரத்து 300 மெகா வாட் நிறுவு திறனுடன் மின்மிகை மாநிலமாகத் திகழ்கிறது. 9,000 மெகாவாட் திறனுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் 2023க்குள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தொடர் நடவடிக்கைகளினால் இந்த ஆண்டு கடும் கோடை காலத்தில் ஏற்பட்ட உச்சக் கட்ட மின்தேவைகள் கூட, தடையின்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக டிசம்பர் 2018 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்களின் இரத்த சோகையை போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும் 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புசத்து, ஊட்டச் சத்து ஆகிய பொருட்கள் அடங்கிய

இரண்டு அம்மா தாய் சேய் நலப் பெட்டகம் வழங்கப்படுகின்றன.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

“கல்லூரிகளில் 50 சதவீதத்திற்கும் மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கம்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை தொடங்கி வைத்தார். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளதுடன் 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் தொடங்கி உள்ளது. இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 48.6 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2014 முதல் 2017 வரையிலான 4 ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நாட்டிலேயே தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.

40 ஆயிரத்து 941 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை 20 ஆயிரத்து 196 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

சென்ற ஆண்டு சுதந்திர தின விழா உரையில், அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், பதக்கங்கள் வென்ற அல்லது கலந்து கொள்ளும் வீரர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கும், தமிழ்நாடு அரசு அல்லது தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் 2 சதவிகிதம் வரை வேலை வாய்ப்பு வழங்கப்படும் என அறிவித்தேன். அதை 3 சதவிகிதமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 201819ஆம் ஆண்டில் 2 லட்சத்து 95 ஆயிரத்து 612 சுய உதவிக் குழுக்களுக்கு 11 ஆயிரத்து 448 கோடியே 99 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கி உயரிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம் இதுவரையில் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 849 பணிக்குச் செல்லும் பெண்கள், 351 கோடியே 30 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியத்தில் இரு சக்கர வாகனங்களை வாங்கி பயன் அடைந்துள்ளனர்.

1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள், ‘தமிழ்நாடு’ மாநிலம் உருவாக்கப்பட்டது. அந்த நாளினை பெருமைப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர் மாதம் முதல் நாள் ‘தமிழ்நாடு நாள்’ என்ற பெயரில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சுமார் 60 லட்சம் ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கு முழுமையான கணக்கெடுப்பிற்குப் பின், சிறப்பு நிதியுதவியாக குடும்பத்திற்கு தலா 2,000 ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கும்.

பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்கு தற்போதுள்ள முறைகளுடன், ஒரு சிறப்புத் திட்டமாக, முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒரு மாத காலத்திற்குள் மனுக்களுக்கு தீர்வு எட்டப்படும்.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பொருட்கள் மீதான தடை 1.1.2019 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதனை முழுமையாக செயல்படுத்த தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. எதிர்கால சந்ததியினரின் நலனுக்கான அரசு எடுத்துள்ள இம்முயற்சிகளுக்கு பொது மக்களும், வணிகர்களும் தங்களது ஆதரவை தொடர்ந்து நல்கிட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நமது முன்னோர்கள் செய்த தியாகத்தின் விளைவாக பெறப்பட்ட இந்த சுதந்திர திருநாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி நமது நாட்டை ஒரு வல்லரசு நாடாக உயர்த்தவும், மேலும் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உயர்த்திடவும் பாடுபடுவோம் என்று இந்த நன்னாளில் உறுதி எடுப்போம்.

நம் மக்கள், மிகவும் மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையைப் பெறுவதற்கு உறுதியான, துடிப்பான, வளமான தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்று இந்த நன்னாளில் சபதம் ஏற்போம். என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 73வது சுதந்திர தின விழாவில் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் சுதந்திர திருநாளையொட்டி சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டார்கள்.

உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தியுள்ளார். அத்திட்டங்களில் முதன்மையானது பணியாற்றும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டமாகும். இந்தியாவிலேயே முதன்முதலில் நம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டம் மகளிருக்குப் பெரிதும் உதவிகரமாக திகழ்கிறது.

தேனி மாவட்டத்தில் 19.08.2019 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு. தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் 1223 பயனாளிகளுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பேரூராட்சி ஓடாநிலையில் 03.08.2019 அன்று நடைபெற்ற விடுதலை போராட்ட வீரர் தீரன் சின்னமலை ஆடிப்பெருக்கு விழாவில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. எ. செங்கோட்டையன் அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டத்தின் மூலம் 750 பயனாளிகளுக்கு மானியம் வழங்குவதற்கான ஆணையையும், 173 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆறு கோடியே அறுபத்து மூன்று இலட்சம் ரூபாய் அளவிலான நேரடி வங்கிக் கடன் இணைப்பிற்கான காசோலையையும் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியின்போது ஈரோடு மாவட்ட ஆட்சியர் சி. கதிரவன், இ.ஆ.ப., அவர்கள், ஈரோடு மாட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் (பொ) முனைவர். மு. பாலகணேஷ் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வே. பொ. சிவசுப்பிரமணி (மொடக்குறிச்சி), திரு. உ. தனியரசு (காங்கேயம்) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

DDU-GKY திட்டத்தில் இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், DDU-GKY திட்டத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம் கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 30.08.2019 அன்று திருவள்ளூரில் உள்ள ரோஸ் மகால், திருமண மண்டபத்தில் (நகராட்சி அலுவலகம் எதிரில்) நடைபெற்றது. இம்முகாமில் கிராமப்புறங்களில் உள்ள 695 இளைஞர்கள் கலந்து கொண்டு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பினை பெற்று பயன் அடைந்தனர்.

மேலும் இம்முகாமில் DDU-GKY திட்டத்தில் பதிவு பெற்ற 10 பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களின் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் அவர்களுக்கேற்றவாறு வேலை வாய்ப்பு

உறுதியுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்குவதற்கு பதிவு செய்து கொண்டனர். மேலும் இம்முகாமில் பல்வேறு பயிற்சிகள் பெற இளைஞர்கள் பதிவு செய்து கொண்டு பயிற்சியுடன் வேலைவாய்ப்பு பெற்று பயனடைய ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் திரு. சரண்ஜித் சிங், இணை செயலர், (மத்திய அரசின் தொழில் திறன் வளர்ப்பு) ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம், திரு. பிரவீன் P. நாயர், இ.ஆ.ப., (மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்), திருமதி. மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., (திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்), திரு. ஜெ. கணேஷ் கண்ணா, (தலைமை இயக்குநர் அலுவலர், DDU-GKY மற்றும் திருமதி. க. லோகநாயகி (திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), திரு. வை. ஜெயக்குமார், (திட்ட இயக்குநர், ஊரக வாழ்வாதார இயக்கம், திருவள்ளூர் மாவட்டம்) ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில்

சுதந்திர தின விழாக் கொண்டாட்டம்

நம் இந்தியத் திருநாட்டின் 73வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, 2019 ஆகஸ்ட் 15 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் சுதந்திர தின விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முன்னதாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்ட பல்வேறு இலக்கியப் போட்டிகள் நடைபெற்றன.

ஆகஸ்ட் 15 அன்று காலை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

முன்னதாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி மற்றும் சிறுவர்களுக்கான மாறுவேடப் போட்டி போன்றவைகளில் கலந்து கொண்டு, முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு செயல் இயக்குநர் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள்

திரு. பா. செல்வராஜன், திரு. ஜா. சம்பத், திரு. ஜெ. கணேஷ் கண்ணா, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. ஜி. சரஸ்வதி கணேசன், இணை இயக்குநர்கள், பொது மேலாளர், அனைத்துப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளூர்

கிராமப்புறங்களில் தொழில் முனைவோர்களை உருவாக்கும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்ட அறிமுகம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கிராமப்புறங்களில் தொழில் முனைவோர்கள், நுண் மற்றும் சிறு / குறு நிறுவனங்களை உருவாக்கும் ஓர் முன்னோடித் திட்டமாக 'தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம்' உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் அறிமுகம் மற்றும் திட்டம் குறித்த பணிமனை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த பணிமனை மற்றும் திட்ட அறிமுக நிகழ்வில் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் முதன்மை செயல் இயக்குநர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது, "மேற்கண்ட திட்டத்தின் பயன்கள் கிராமப்புற பயனாளிகளை சென்றடையும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மேலும், இத்திட்டத்தின் நோக்கங்கள், செயல்பாடுகள் குறித்து திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் குறிப்பிடும் போது, "கிராமப்புறங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர்களை கண்டறிவதுடன், அவர்கள் தொழில் செய்ய ஏற்ற சூழலை உருவாக்கி, நிதி வசதிகள் ஏற்படுத்தி தருவதை முக்கிய நோக்கமாக கொண்ட திட்டம் என்றும், இதன் மூலம் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தி நிறுவனங்கள், தொழில் முனைவோர் உருவாக வாய்ப்புகள் ஏற்படுத்தி தருவதுடன் அதற்கேற்ற பயிற்சிகளும் வழங்கப்படும் எனவும், இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர், சோழவரம் மற்றும் கடம்பத்தூர் ஆகிய வட்டாரங்களில் உள்ள 198 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்ட உள்ளது" எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அனைத்துத் துறை அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் ஊரக புத்தாக்கத் திட்டத்தின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு நகர்புற வாழ்வாதார இயக்கம், வீ. ஆர். யுவர் வாய்ஸ் தொண்டு நிறுவனம் மற்றும் சென்னை இலயோலா கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகளுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 25.08.2019 அன்று சென்னை இலயோலா கல்லூரியில் நடைபெற்றது.

முன்னதாக இவ்வேலை வாய்ப்பு முகாம் குறித்து “No One Left Behind” என்ற பரப்புரை வெளியீட்டு நிகழ்வு 05.08.2019 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திரு. ஜா. சம்பத், திரு. ஜெ. கணேஷ் கண்ணா, திரு. சி. கே. வீரணன், இணை இயக்குநர்கள், தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் முதன்மை செயல் இயக்குநர் திருமதி. தீபா ராஜ்கமல், திரு. போரஸ் (இலயோலா கல்லூரி), திரு. பாஷித் காசிம் (நிறுவனர், வீ. ஆர். யுவர் வாய்ஸ் தொண்டு நிறுவனம்) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள இளைஞர்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது மற்றும் இணையத்தில் பதிவு செய்தல் போன்றவை குறித்து பயிற்சிகள் 2019 ஆகஸ்ட் 8, 13, 14 மற்றும் 19 ஆகிய தேதிகளில் வீ. ஆர். யுவர் வாய்ஸ் தொண்டு நிறுவனம் மூலம் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றது. இதில் மாவட்ட திட்டப் பணியாளர்கள், சமூக வளப் பயிற்றுநர்கள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 25.08.2019 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமின் துவக்க நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத், இணை இயக்குநர் திருமதி. பாரிஜாதம், தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் முதன்மை செயல் இயக்குநர் திருமதி. தீபா ராஜ்கமல் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 5500 மாற்றுத் திறனாளிகள் வேலை வேண்டி பதிவு செய்தனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் 135 தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தங்கள் நிறுவனத்திற்கு தேவையானவர்களை தேர்வு செய்தனர். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 1967 நபர்களில் 375 நபர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

→திருவண்ணாமலை

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாரச்சந்தை

திருவண்ணாமலை அரசு கலை கல்லூரி அருகில் உள்ள சந்தைமேடு மைதானத்தில் விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சாலையோர வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோர் நேரடியாக பயன்பெறும் வகையில் 25.08.2019 அன்று வாரச்சந்தை துவங்கப்பட்டது. இதன் துவக்க விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று வாரச் சந்தையினை தொடங்கி வைத்து, விற்பனையையும் துவக்கி வைத்ததோடு, மாட்டு சந்தையையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் ஸ்ரீதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. அண்ணாதுரை, நகராட்சி ஆணையர் (பொறுப்பு) திரு. சுரேந்திரன், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இந்த வாரச் சந்தையில் காய்கறிகள், பழங்கள், உணவு பண்டங்கள், தானிய வகைகள், மளிகைப் பொருட்கள் மற்றும் ஆடு, மாடு, கோழிகள் போன்றவையும் விற்பனை செய்யப்படுகிறது.

→நாமக்கல்

தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு பணி வாய்ப்பு பெற்றுத் தரும் வேலை வாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம் 06.08.2019 அன்று இராசிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு வேண்டி விண்ணப்பித்த 291 பயனாளிகளில் பல்வேறு நிறுவனங்களில் பணிவாய்ப்புக்குத் தேர்வு செய்யப்பட்ட 109 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மணி வழங்கினார்.

➔தூத்துக்குடி

வேலைவாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்



தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் தூத்துக்குடி மாவட்டம் வ.உ.சி கலைக் கல்லூரியில், மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் 20.07.2019 அன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) திருமதி. பேச்சியம்மாள் ஆகியோர் தலைமை வகித்தனர். 3250 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும், 75 தனியார் தொழில் நிறுவனங்களும் கலந்து கொண்ட இம்முகாமில் பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற 713க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பணி நியமன ஆணைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வ.உ.சி.கல்லூரி முதல்வர் திரு. வீரபாகு அவர்கள், அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

➔மதுரை

பொருளாதாரம் உயர உதவிய மகளிர் திட்டம்

என் பெயர் வசந்தி, நான் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், வகுரணி ஊராட்சி, நடுபட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எங்கள் பகுதியில் செயல்படும் யுகம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளதால் குழுவின் மூலம் வங்கி கடன் பெற்று சிறு தொழில் செய்து வந்தேன். பின்னர் DTP என்ற படிப்பை படித்து, அதன் அடிப்படையில் ஒரு அச்சகத்தில் பணிக்கு சென்று வந்தேன். பின்னர் சுயமாகத் தொழில் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தில், எங்கள் குழு உறுப்பினராக உள்ள

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வாயிலாக கடன் வேண்டி விண்ணப்பித்தேன். மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி வங்கி மூலம் ரூ. 80,000/- நேரடிக் கடனும், கூட்டமைப்பின் மூலம் CIF நிதியாக ரூ. 60,000/-மும் பெற்று, அந்தத் தொகையில் Computer, Printer, Camera போன்ற பொருட்களை வாங்கி, ஒரு கடையை வாடகைக்கு எடுத்து தற்போது அச்சகம் சம்பந்தமான தொழில் செய்து வருகிறேன்.

இத்தொழிலில் மாதம் ஒன்றிற்கு ரூ. 12,000/ வரை எனக்கு வருமானம் கிடைக்கிறது. இதன் மூலம் என்னுடைய வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது. எனது வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு அரசு, மகளிர் திட்டம், யுகம் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு எனது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

➔கன்னியாகுமரி

மருதங்கோடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன்

ஊரக ஏழை மக்களுக்கான வலுவான உயிரோட்டத்துடன் கூடிய மக்கள் அமைப்புகளை உருவாக்கி, நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பல்வேறு சேவைகளையும் முறையாக பெற வழிவகை செய்து, வாழ்வாதாரத்தை உயர்த்தி குடும்ப வருமானத்தைப் பெருக்குவதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும்.

இவ்வியக்கத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 91 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களும், 94 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், 3689 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களுக்கு வங்கியிலிருந்து நேரடிக் கடன்கள் பெற்றுத் தருவதோடு சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான பயிற்சிகள் வழங்கப்படுவதால் பெண்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் பெருங்கடன்கள் வழங்கப்பட்டு பெருங்கடன் தொகை அக்கூட்டமைப்பின் கீழ் செயல்படும் சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் செய்வதற்காக வழங்கப்பட்டு வருகிறது. 27.08.2019 அன்று நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மருதங்கோடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபாயினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. வே. பிச்சை, உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டச்சத்து இயக்கம்... தெரிந்து கொள்ளடி தோழி!

ஊட்டச்சத்து இயக்கம் ஒன்று
நாட்டில் நடக்குது தோழி ! -அதைப்
பாட்டில் சொல்ல வந்தேன் நன்றாய்க்
கேட்டுக் கொள்ளடி தோழி !

உடம்பை வளர்த்தார் உயிர் வளர்த்தார்
எனப் பாடி வைத்தார் சித்தரெல்லாம்
சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை-உடல்
நலம் இல்லாமல் இன்பங்கள் இல்லை

சரியான உணவை, சமச்சீர் உணவை
முறையாக உண்ணும் பெண்களுக்கு
எந்நாளும் நோய்கள் வருவதில்லை-அவர்
உடல் வளம் எப்போதும் குறைவதில்லை.

கீரைகள், காய்கள், தானிய வகைகள்,
பழங்கள், இறைச்சி, பலவித மீன்கள்
யாவும் உடலுக்கு நல்லது செய்யும்
இயற்கை உணவே ஆரோக்கியம் வளர்க்கும்

பீசா, பர்கர் உணவு வகைகள்
நோய்களை வளர்க்கும், உடலைக் கெடுக்கும்
அதிகச் செலவும், அதிகக் கொழுப்பும்
அமைதியைக் குலைக்கும்; பதற்றம் வளர்க்கும்

நல்ல உணவை உண்பதற்கு, உடல் நலம் சீராய் இருப்பதற்கு
ஊட்டச்சத்து இயக்கம் ஒன்று உதவி செய்ய வந்ததடி
பெண்கள், குழந்தைகள் வளர்ச்சி பெற, உடலும் மனமும் எழுச்சி பெற
பலவித எளிய உணவுகளைப் பட்டியல் இட்டுக் காட்டுதடி

அங்கன்வாடி மையங்களும், இயற்கை காய்கறிச் சந்தைகளும்
என்றும் நமக்கு சத்துணவை அள்ளி வழங்கும் நிலையங்களாம்
உணவே மருந்தாய், கண்ணுக்கு விருந்தாய்,
பலவித உணவைச் சுவைத்தே மகிழ
அரசு அமைத்த மையங்களே என்றும் நமது இருப்பிடமாம்

உடல் மெலிவையும் எடைக் குறைவையும்
எப்பொழுதும் இனித்தவிர்த்திடுவோம்.
இரத்த சோகை, மனச்சோர்வு முழுதும் நீக்கி மகிழ்ந்திடுவோம்
ஊட்டச்சத்து இயக்கம் தந்திடும் பலன்கள் யாவும் அடைந்திடுவோம்
பிறை நிலா போன்ற மெலிவை நீக்கி முழுமதியழகைப் பெற்றிடுவோம்!!!

– ஜா. சம்பத்
கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள்

பனியன் தொழிலில் தடம் பதித்த ஜெய்ஹிந்த் மகளிர் சுய உதவிக் குழு

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி, தொட்டிய மண்ணறைப் பகுதியில் செயல்பட்டு வரும் ஜெய்ஹிந்த் மகளிர் சுய உதவிக் குழுவினர் பனியன் உற்பத்தித் தொழில் தங்களின் வெற்றித் தடத்தை வலிமையாகப் பதித்துள்ளனர்.

இக்குழுவினர் தங்கள் பகுதியில் செயல்படும் இந்தியன் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி, மாதந்தோறும் ரூ. 300/ வீதம் சேமித்து வருகின்றனர். இக்குழுவினர் தவறாது குழுக் கூட்டம் நடத்துதல், சேமிப்புக் கணக்கை சரியாகப் பராமரித்தல், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் பயிற்சிகளை முழுமையாக பெறுதல் ஆகியவற்றின் மூலம் தங்கள் குழுவின் செயல்பாடுகளை வடிவமைத்து சிறப்பாகச் செயல்பட்டனர்.

அதன் காரணமாக, இக்குழுவின் உறுப்பினர்கள் சுய தொழில் தொடங்க ஏதுவாக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுய வேலை வாய்ப்பிற்கான வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடனாக ரூபாய் ஐந்து லட்சம் 2018-19ஆம் ஆண்டில் குழுக் கடனாக பெற்றுத் தரப்பட்டது. இத்தொகையினை மூலதனமாகக் கொண்டு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, பனியன் உற்பத்தியில் ஈடுபட்டனர்.

இதன் மூலம் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருக்கும் மாதந்தோறும் இலாபத்தில் பங்கீடாக ரூ. 5,000/ வரை கிடைக்கிறது.

இத்தொகையினைக் கொண்டு தங்களின் பொருளாதாரத் தேவைகளை ஈடுகட்டி வருகின்றனர். குடும்பத்தின் பொருளாதாரத் தேவையினை ஈடு செய்து வருவதால், குடும்பத்தில் இவர்களே அனைத்து நிகழ்வுகளிலும் முதன்மை பெறுகிறார்கள்.

இக்குழுவின் உறுப்பினர்கள் உற்சாகத்துடனும், ஒற்றுமையுடனும் செயல்பட்டு தங்களின் குழுவினை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

“எங்களின் வாழ்விற்கு வளம் சேர்த்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் மனமகிழ்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்” என ஜெய்ஹிந்த் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சின்னத்தாய் மகளிர் சுய உதவிக் குழுவின் மளிகைக் கடை

திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம் பகுதி, ஆவடி மாநகராட்சியில் சின்னத்தாய் மகளிர் சுய உதவிக் குழு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் 13 மகளிரைக் கொண்டு உருவாக்கப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இக்குழுவின் உறுப்பினர்கள் மாதந்தோறும் இந்தியன் வங்கியில் ரூ. 200/ வீதம் சேமித்து வருகின்றனர். இக்குழு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதால், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய வேலை வாய்ப்பிற்கான வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடனாக ரூபாய் ஐந்து லட்சம் 2017-18ஆம் ஆண்டில் குழுக்கடனாக பெற்றுத் தரப்பட்டது. இத்தொகையினை மூலதனமாகக் கொண்டு இக்குழுவினர் மளிகைக் கடை ஒன்றினைத் தொடங்கி, இதுநாள் வரை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

இதன் மூலம் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருக்கும் மாதந்தோறும் இலாபத்தில் பங்கீடாக ரூ. 3,000/ முதல் ரூ. 5,000/ வரை கிடைக்கிறது.

இதவீனைக் கொண்டு, குழு உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தின் பொருளாதாரத் தேவையினை ஈடு செய்து வருவதால், குடும்பத்தில் அவர்களுக்கென தனி கௌரவமும், பாராட்டும் கிடைக்கிறது.

இந்த சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் இணைந்து தங்களின் குழுவினையும் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

“எங்களின் வாழ்வாதாரத்திற்கு வலிமை தந்து, எங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து வரும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்” என்று சின்னத்தாய் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துக் கொள்கின்றனர்.

பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்! பூமியைக் காப்போம்!!

நாம் வாழும் இடத்தை அதிகம் ஆக்கிரமித்திருக்கும் பொருட்களில் பெருமளவு பிளாஸ்டிக்தான். மளிகை முதல், உணவு, மருந்துகள் என அனைத்தும் பிளாஸ்டிக் பையில்தான் கிடைக்கின்றன. மலிவான விலையில், எளிதில் கிடைக்கக் கூடியது, எளிதில் அப்புறப்படுத்தக் கூடியது என்பதால், பிளாஸ்டிக்கின் மோசமான பின்விளைவுகளைப் பற்றி யாரும் பெரிதாக அலட்டிக்கொள்வது இல்லை.

முன்பு சாப்பிட வாழை இலை, தையல் இலை, உலோகத் தட்டுகள் பயன்படுத்தினோம். இன்று கண்களைக் கவரும் நிறங்களிலும், வடிவங்களிலும் நம் வீட்டில் பிளாஸ்டிக் தட்டுகளும், குவளைகளும் நிறைந்துள்ளன. மலிவான விலையில் பிளாஸ்டிக் பொருட்கள் கிடைப்பதால், நம் வீடுகள் பிளாஸ்டிக் வீடுகளாக மாறிவிட்டன. சமையல் அறையில் நம் பாரம்பரிய அஞ்சறைப் பெட்டிகூட இப்போது பிளாஸ்டிக் பெட்டிதான். இது பார்க்க அழகாகத் தெரியலாம், ஆனால் உடலுக்குக் கேடு விளைவிப்பதில் முதல் இடம் பிளாஸ்டிக்கிற்குதான். முன்பெல்லாம் கடைக்கு காய்கறி, மளிகை சாமான் வாங்கச் செல்ல துணிப்பை கொண்டு செல்வோம். இன்று துணிப்பை என்பது கேலிக்குரியதாக மாறி விட்டது.

பிளாஸ்டிக்கை ஏன் தவிர்க்க வேண்டும்?

'பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் இப்போது என்ன ஆகிவிடப் போகிறது? பிரச்னை வரும்போது பார்த்துக் கொள்ளலாம்' எனும் அசட்டுத் தைரியத்தில் நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களால், நோய்களின் ஆதிக்கம்தான் அதிகரிக்கும்.

சூடான உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் தட்டு, கிண்ணத்தில் வைத்துச் சாப்பிடும்போது, அதில் உள்ள பி.பி.ஏ (BPA) என்ற ரசாயனம், உடலுக்குள் சென்று, ஹார்மோன் மாற்றங்கள், உடல் பருமன், சிறு வயதிலேயே பருவம் எய்துதல், விந்தணுக்கள் குறைதல், இதய நோய், மார்பகம் மற்றும் ப்ராஸ்டேட் புற்றுநோய், குழந்தையின்மை, கருச்சிதைவு, டைப் 2 சர்க்கரை நோய், கல்லீரல் பாதிப்பு, நரம்பு தொடர்பான பிரச்னைகள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தலாம். பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவோரிடம் நடத்தப்பட்ட ரத்தப் பரிசோதனையில் அவர்கள் ரத்தத்தில் பி.பி.ஏ ரசாயனம் இருந்ததாக நோய்த்

பிளாஸ்டிக் தவிர்க்க... மாற்று வழிகள்...

- பிளாஸ்டிக் பிரஷ் பயன்படுத்தினாலும், இரண்டு-மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றிவிட வேண்டும். தொடர்ந்து பயன்படுத்தும் போது, பிரஷ்ஷில் இருந்து அதிகமான ரசாயனங்கள் வெளியாகும்.
- சோப் பாக்ஸ், குளிக்கப் பயன்படுத்தும் பக்கெட், மக் போன்றவற்றை அலுமினியமாகவோ, ஸ்டீலாகவோ மாற்றலாம். இது துருப்பிடிக்காது. நீண்ட நாட்களுக்குப் பயன்படும்.
- தண்ணீர் குடிக்க, பித்தளை, ஸ்டீல் பாட்டிலைப் பயன்படுத்தலாம். மதிய உணவை எடுத்துச் செல்வதற்கு பிளாஸ்டிக் அல்லாத ஸ்டீல் லஞ்ச் பாக்ஸ் நல்லது.
- தட்டு, டம்ளர், கிண்ணம் போன்றவற்றை ஸ்டீல் அல்லது பித்தளையில் வாங்கிப் பயன்படுத்தலாம். பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் உடலுக்கு ஆரோக்கியம் அளிப்பவை.
- குழந்தைகளுக்கு பேபி பாட்டிலோ, பிளாஸ்டிக் அல்லது ரப்பர் நிப்பிலோ கொடுப்பதை தவிருங்கள். குழந்தைகளின் ஃபீடிங் பாட்டிலில் மிக மோசமான பிளாஸ்டிக் கலக்கப்படுகிறது என்கின்றன ஆய்வுகள். உணவு, மருந்து, தண்ணீர் போன்றவற்றை ஸ்பூன், பாலாடை, ஸ்டீல் கிண்ணம், ஸ்டீல் டம்ளரில் கொடுக்கலாம்.
- மைக்ரோவேவ் அவனில் பயன்படுத்தப்படுவது உயர்தரமான பிளாஸ்டிக் என்றாலும் விழிப்புடன் இருப்பது அவசியம்.
- ஹோட்டலில் உணவு வாங்க, வீட்டிலிருந்து பாத்திரங்களை எடுத்துச் செல்லுங்கள். ஹோட்டல் உரிமையாளரை வாழை இலையில் பேக் செய்து தரச் சொல்லிக் கேட்கலாம். வாழை இலை இரண்டு முதல் 10 நாட்களில் மக்கிவிடும்.
- இளநீர், பழச்சாறு குடிக்கும்போது ஸ்ட்ரா தவிர்க்கலாம்.
- நான்ஸ்டிக் பாத்திரங்களை சூடாக்கும்போது மோசமான கெமிக்கல்களை வெளியிடும். மண் பாண்டங்கள், எவர்சில்வர் பாத்திரங்களுக்கு மாறுங்கள்.
- கடைக்குச் செல்கையில், துணிப்பைகளை வைத்திருங்கள்.

இதைப் பின்பற்றினால் நம் உடலும், நாம் வாழும் பூமியும் ஆரோக்கியமாக இருக்கும்!

தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் (Centre for disease control and prevention) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பெரியவர்கள் மட்டுமல்ல, பச்சிளம் குழந்தைகள்கூட இதனால், பாதிக்கப்படுகின்றனர் என்பதுதான் அதிர்ச்சியான தகவல்.

என்னென்ன விளைவுகள்?

பாலிகார்பனேட் கலந்த பிளாஸ்டிக்கை சூடுபடுத்தினாலோ அல்லது வெயில் பட்டாலோ, அதிலிருந்து பிஸ்பினால் ஏ (Bisphenol A) எனும் ரசாயனம் வெளிப்படுகிறது. பாலியஸ்டரிலிருந்து ஸ்ட்ரீன் வெளிவரும். பி.வி.சியில் இருந்து, வினைல் குளோரைடு மற்றும் தாலேட்ஸ் வெளிவரும். தாலேட் உள்ள பொருட்களை ஐரோப்பிய யூனியன் 2005ம் ஆண்டே தடை செய்துவிட்டது. ஆனால், நம் ஊரில் உள்ள பெரும்பாலான பிளாஸ்டிக்கில் தாலேட் உள்ளது. நம் வீடுகளில் உள்ள உட்புறக் காற்றினுள்கூட கலந்து விடுவதால், ஆண்களுக்கான டெஸ்டோஸ்டீரான் ஹார்மோன் சுரப்பியில் பாதிப்பை ஏற்படுத்தி, இனப்பெருக்க செயல் திறனில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஹோட்டல்களில் உணவை பேக் செய்யும் கவர், காஸ்மெடிக் பொருட்களை அடைத்து வைக்க, குழந்தைகள் விளையாட, தண்ணீர் பைப் போன்ற பொருட்கள் செய்யப் பயன்படும் பிளாஸ்டிக்கில் பாலிவினைல் குளோரைடு என்ற கெமிக்கல் காணப்படுகிறது. இது புற்றுநோய், பிறவிக் குறைபாடுகள், சுவாசப் பிரச்னை, சரும அலர்ஜி, செரிமானக் கோளாறு கல்லீரல் பாதிப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்தலாம்.

பாலி கார்பனேட் மற்றும் பிஸ்பினால் ஏ, உணவு பேக்கிங், தரமான தண்ணீர் பாட்டில்களில் காணப்படுகின்றன. இது எதிர்ப்பாற்றலைக் குறைக்கும், உடல் பருமன், சர்க்கரை நோய், அதீத இயக்கங்கள் போன்ற பிரச்னைகளை ஏற்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன.

எது நல்ல பிளாஸ்டிக்?

சரி இந்த பிரச்னைகள் ஏதும் ஏற்படுத்தாத நல்ல பிளாஸ்டிக் ஏதேனும் இருக்கிறதா என்ற கேள்வி எழலாம். பிளாஸ்டிக்கில், நல்ல பிளாஸ்டிக் என்பதே இல்லை. பிளாஸ்டிக்கை மோசமானது, மிகவும் மோசமானது என்றே பிரிக்க முடியும். எந்த பிளாஸ்டிக் பயன்படுத்தினாலும் ரசாயனங்கள் வெளிவரத்தான் செய்யும். விளைவுகளும் ஏற்படும். ஆனால் அதன் அளவுகள் மட்டுமே மாறுபடும். எனவே, பிளாஸ்டிக்கை முற்றிலும் நிராகரிப்பதுதான் ஒரே வழி.

தமிழக அரசும் 2019 ஜனவரி 1ஆம் தேதி முதல் குறிப்பிட்ட அளவு கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்குத் தடைவிதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள்

கயிறு மற்றும் கயிறு மேட் தயாரிப்பில் வெற்றி பெற்ற மகளிர் குழுக்கள்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தாண்டராம்பட்டு களப்பகுதி ஆம்பலாப்பட்டு தெற்கு ஊராட்சியில் வசந்தம் மகளிர் சுய உதவிக்குழு 12 உறுப்பினர்களைக் கொண்டு கடந்த 2012ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் பேங்க் ஆப் இந்தியா பாப்பாநாடு கிளையில் சேமிப்புக் கணக்கு துவங்கி தவறாது சேமித்து வருகின்றனர்.

மகளிர் திட்டத்தின் சார்பில் தொழில் முனைவோர் பயிற்சி பெற்றுள்ள இக்குழுவின் உறுப்பினர்கள், சுய தொழில் மேற்கொள்ள விரும்பி தங்களின் குழு இணைந்துள்ள கூட்டமைப்பின் வாயிலாக மகளிர் திட்டத்திற்கு விண்ணப்பித்தனர். அவர்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கூட்டமைப்பின் மூலம் ஊக்கத் தொகையாக ரூ. ஒரு லட்சம் கடனாகப் பெற்றும், குழு கடனாக இரண்டு இலட்சம் என மொத்தம் மூன்று இலட்சம் ரூபாயினை முதலீடாகக் கொண்டு கயிறு திரிக்கும் இயந்திரம், மேட் இயந்திரம் மற்றும் மூலப்பொருட்களை வாங்கி, குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கயிறு உற்பத்தியில் ஈடுபடும் குழுவின் உறுப்பினர்களுக்கு தினசரி கூலி வழங்கப்படுகிறது, தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் பெற்றுள்ள கடன் தொகையினை திரும்பச் செலுத்தி விட்டனர்.

இக்குழுவினர் தயாரிக்கும் கயிற்றினை மூலப்பொருளாகக் கொண்டு இப்பகுதியில் செயல்படும் ஸ்ரீ வீரம்மாகாளி மகளிர் சுய உதவிக் குழுவினர் கயிறு மேட்டை தயாரிக்கின்றனர். 2015ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஸ்ரீ வீரம்மாகாளி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள 12 பெண்களும் இலக்கு மக்களாவர். இக்குழுவின் உறுப்பினர்களுக்கும் மகளிர் திட்டம் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டது. குடிக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி

சேமித்து வரும் இக்குழுவினருக்கு, கூட்டமைப்பின் மூலம் ரூ. 75,000/-வழங்கப்பட்டது. அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு கயிறு மேட் இயந்திரம் வாங்கி, குழுவின் உறுப்பினர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி கயிறு மேட் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

வசந்தம் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் ஸ்ரீ வீரம்மாகாளி மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் கூறும்போது, 'பிறரிடம் கூலி வேலைக்குச் சென்று வந்த நாங்கள் இன்று தொழில் முனைவோர்களாக உருவெடுத்து சொந்தமாக தொழில் செய்து வருவாய் ஈட்டி வருகிறோம். எங்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மகளிர் திட்டத்திற்கு மிகவும் நன்றி' என்று குறிப்பிட்டனர்.

மாற்றுத் திறனாளிக்கு வாழ்வாதாரம் தந்த திட்டம்

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரம், வடவேர் ஊராட்சியில் வசித்து வரும் ஜெயந்தி, (த/பெ. தட்சிணாமூர்த்தி) ஒரு மாற்று திறானாளி. இவரால் எந்த வேலைக்கும் செல்ல முடியாது. சுய தொழில் மேற்கொள்ளலாம் என்றால் அதற்கு தேவையான மூலதனம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார்.

இந்நிலையில் இப்பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் வாயிலாக இவருக்கு தனிநபர் கடனாக ரூ. 10,000/- வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு தனது வீட்டின் ஒரு பகுதியில் சிறிய அளவிலான கடை ஒன்றினை வைத்துள்ளார். தற்போது இந்தக் கடையின் மூலம் தினசரி ரூ. 250/-வரை வருவாய் பெற்று வருகிறார் ஜெயந்தி. மாற்றுத் திறனாளியான தனக்கு வருவாய் பெற உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் ஜெயந்தி.

வீட்டில் சிலருக்கு கொலஸ்ட்ரால், ரத்தக்கொதிப்பு இருந்தால், எண்ணெய் விடாமல் தோசை கேட்பார்கள். தோசைக் கல்லை அடுப்பில் வைத்ததும் முதல் தோசையை எண்ணெய் தடவி எடுங்கள். அடுத்த தோசையை எண்ணெய் தடவாமல், மாவை ஊற்றி மூடி போட்டு வேக வைத்து எடுத்துப் பரிமாறுங்கள்.

பெண்கள் நாட்டின் கண்கள்...

ஓ...! பெண்ணே...!
அடக்கமாய் இரு... ஆனால்
அடங்கிப் போகாதே...!
உன் சுதந்திரம் பறிக்கும் வரை.
பறிபோகும் வரை அசந்து இருக்காதே...!
அழுவதற்கும் கணவனின்
பாதம் தொழுவதற்கும்,
வீட்டு வேலை செய்வதற்கும்,
மட்டும்தான் பெண்கள் என்ற
குறுகிய எண்ணம் கொண்ட
சித்தாந்தவாதிகளின்
நாக்குகளை அறுத்து
நறுக்கிப் போடு...
எனைப் பெற்றவளும் பெண்தான்,
பேணி காப்பவளும் பெண்தான்,
பெண்மையே வாழ்க...!
பெருமை சேர்க...!!

- **ஜான் அகஸ்டின்**
வட்டார ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு மாநில ஊரக
வாழ்வாதார இயக்கம்,
திருத்தணி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

செண்பகப் பூ மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

திருவள்ளூர் மாவட்டம், சோழாவரம் வட்டாரம், பாடியநல்லூர் ஊராட்சியில் 2004ஆம் ஆண்டு முதல் செண்பகப் பூ மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. பாடியநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 16 பெண்களும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இக்குழுவினர் ஆண்டார்குப்பம் இந்தியன் வங்கி கிளையில் சேமிப்புக் கணக்கு துவங்கி சேமித்து வந்தனர். திருவள்ளூர் மாவட்ட மகளிர் திட்ட அலகின் வழிகாட்டுதலுடன் பல்வேறு தொழில் பயிற்சி பெற்றுள்ள இக்குழுவின் உறுப்பினர்கள் சுய

தொழில் மேற்கொள்ள தேவையான மூலதனத்திற்காக கடன் வேண்டி மகளிர் திட்டத்திடம் விண்ணப்பித்தனர்.

மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் சோழவரம் இந்தியன் வங்கியின் மூலம் இவர்களுக்கு ரூ. ஐந்து லட்சம் தொழிற்கடன் வழங்கப்பட்டது. இதில் ரூ. 1.25 இலட்சம் மானியம் ஆகும். இந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு, சானிடரி நாப்கின் தயாரிக்கும் இயந்திரங்கள், தேவையான மூலப்பொருட்கள் போன்றவற்றை கொள்முதல் செய்த செண்பகப் பூ மகளிர் சுய உதவிக் குழுவினர் சானிடரி நாப்கின்களை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

இக்குழுவினர் தயாரிக்கும் சானிடரி நாப்கின்களை தமிழ்நாடு மருத்துவ சேவை நிறுவனத்தினர் வாங்கிக் கொள்கின்றனர். பல்வேறு வகையில் சானிடரி நாப்கின்களை தயாரித்து விற்பனை செய்து வருவாய் ஈட்டி வரும் செண்பகப் பூ மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஸ்ரீ வெங்கடேஷ்வரா மகளிர் சுய உதவிக் குழு

வேலூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், வெங்களாபுரம் ஊராட்சி வெங்கடேஷ்வரா நகர் பகுதியில் ஸ்ரீ வெங்கடேஷ்வரா மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவினைச் சேர்ந்த 5 பெண்கள் ஒன்றாக தங்கள் வீட்டின் அருகில் சிறிய அளவில் மரச்செக்கு ஒன்றினை அமைத்து, அதன் மூலம் எண்ணெய் ஆட்டி விற்பனை செய்து அதன் மூலம் வருவாய் பெற்று வந்தனர். இந்நிலையில் தங்களின் தொழிலை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற விருப்பத்தில் அதற்குரிய மூலதனம் வேண்டி இப்பகுதியில் செயல்படும் கூட்டமைப்பின் மூலம் ரூ. 75,000/ கடன் பெற்று அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு எண்ணெய் ஆட்டுதவதற்கான செக்கு மற்றும் மூலப் பொருட்களை வாங்கி தற்போது தங்களை தொழிலை விரிவுபடுத்தி உள்ளனர். இக்குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை வேலூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் 'வெல்மா' வாயிலாக விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் இக்குழுவின் உறுப்பினர்கள் மாதந்தோறும் கணிசமானள அளவில் வருவாய் பெற்று

வருவதுடன் தங்களின் கடனையும் திரும்பச் செலுத்தி விட்டனர். தங்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மகளிர் திட்டத்திற்கு தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர் ஸ்ரீ வெங்கடேஷ்வரா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

பொம்மைகள் தயாரிக்கும் மரகதம் மகளிர் சுய உதவிக் குழு

பாரம்பரியம்மிக்க கோவில்களுக்கும், கண்ணையும் கருத்தையும் கவரும் பட்டு ஆடைகளுக்கும் புகழ் பெற்றது காஞ்சிபுரம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இத்தகு சிறப்பு மிக்க காஞ்சிபுரத்தின் உட்பகுதியான சின்னக் காஞ்சிபுரத்தில் கலைநயம் மிகுந்த, சுற்றுச் சூழக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ண வண்ண பொம்மைகளும் மரகதம் சுய உதவிக் குழுவின் மகளிரால் தயாரிக்கப்படுகின்றன. இது குறித்து அக்குழுவின் தலைவியான திருமதி கற்பகம் என்பவர் கூறுவதை சற்று கேட்போமா...

காஞ்சிபுரம் நகரின் ஒரு பகுதியான சின்ன காஞ்சிபுரம், அஸ்தகிரி தெருவில் கடந்த 10 வருடங்களாக எங்கள் மரகதம் மகளிர் சுய உதவிக் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் திட்டம் வாயிலாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து சுய தொழில் மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினர். அதற்கான மூலதனத்திற்காக மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் மூன்று இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் பெற்றோம். அதை மூலதனமாகக் கொண்டு பொம்மைகள் தயாரித்து விற்பனை செய்து வருவாய் பெற்றோம். வங்கிக் கடனையும் திரும்பச் செலுத்தி விட்டோம்.

பின்னர் எங்களின் தொழிலை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் சேமிப்புத் தொகையை மூலதனமாக வழங்கினர். அந்தத் தொகையைக் கொண்டு பொம்மைகள் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்களை அதிக அளவில் வாங்கி பொம்மைகளை தயாரிக்கத் தொடங்கினோம்.

எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பொம்மைகள் தயாரிப்பில் ஈடுபடுகிறோம். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மண் மற்றும் காகிதக் கூழ் கொண்டு நாங்கள் பொம்மைகளைத் தயாரிப்பதால் எங்கள் தயாரிப்புகளை அனைவரும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

நாங்கள் தயாரிக்கும் பொம்மைகள் உள்ளூர் மட்டுமின்றி பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்ய வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். மேலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளிலும் எங்கள் பொம்மைகளை விற்பனை செய்கிறோம். சிறந்த விற்பனைக்கான சான்றிதழும் எங்கள் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

பொம்மைகள் தயாரிப்பில் எங்கள் குழுவின் உறுப்பினர்களே ஈடுபட்டு வருவதால் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் ரூ. 12 ஆயிரம் முதல் ரூ. 15 ஆயிரம் வரை வருவாய் பெறுகின்றனர். எங்களுக்கு பயிற்சிகள் வழங்கி, வங்கிக் கடன் பெற்றுத் தந்து, தொழில் நடவடிக்கையில் ஈடுபடச் செய்து, மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று மரகதம் மகளிர் சுய உதவிக் குழுவினர் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

பாக்கு மட்டைத் தட்டுகள் உற்பத்தி செய்யும் நீல மலர்கள் மகளிர் சுய உதவிக் குழு

தருமபுரி மாவட்டம், அரூர் தாலுக்கா, எச். தாதம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பச்சினம்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் நீல மலர்கள் சுய உதவிக் குழுவில் 13 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

மகளிர் திட்டம் வாயிலாக பல்வேறு தொழில் பயிற்சிகளைப் பெற்ற இக்குழுவின் உறுப்பினர்கள் சுய தொழில் மேற்கொள்ள விரும்பி அதற்குத் தேவையான மூலதனத்திற்காக வங்கிக் கடன் பெற விண்ணப்பித்தனர். இவர்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இக்குழுவினருக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டது.

அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு பாக்கு மட்டைகள் தயாரிக்கும் இயந்திரங்கள், பாக்கு மட்டை மூலப்பொருட்கள் போன்றவற்றை கொள்முதல் செய்த நீலமலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினர் பாக்குமட்டைத் தட்டுகளைத் தயாரித்து உள்ளூர் மற்றும் வெளியூர்களில் விற்பனை செய்கின்றனர். தற்போது குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர்.

மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்து வந்த தங்களை சுய தொழில் மேற்கொள்ளும் தொழில் முனைவோர்களாக மாற்றி மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற வகைசெய்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதரத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் தங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர் நீல மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

வாழை உபபொருட்கள் பூச்சரத்தின் செயல்பாடுகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் தோளூர்பட்டி ஊராட்சி, மேலகார்த்திகைப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த 21 பெண்கள் ஒன்றிணைந்து வாழைப் பொருட்கள் தயாரிக்கும் ஒத்தத் தொழில் குழுவை அமைத்து செயல்பட்டு வருகின்றனர்.

இக்குழுவின் உறுப்பினர்கள் தொட்டியம் ஸ்டேட் வங்கியில் தோளூர்பட்டி வாழை உபபொருட்கள் பூச்சரம் என்ற பெயரில் வங்கிக் கணக்கு துவங்கி சேமித்து வந்தனர். இக்குழுவின் உறுப்பினர்கள் வாழைப்பூ ஊறுகாய், வாழைத்தண்டு ஊறுகாய், வாழைப்பூ வடை, வாழைப்பூ பிஸ்கட், வாழைப்பூ சூப் போன்ற பொருட்களை தயாரித்து விற்பனை செய்து, வருவாய் பெற்று வந்தனர்.

இந்நிலையில் இக்குழுவிற்கு மகளிர் திட்டத்தின் மூலம் ஊக்கத் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு தாங்கள் செய்து வந்த தொழிலை மேலும் விரிவுபடுத்த விரும்பி, தங்களின் பொருட்கள் தயாரிக்கத் தேவைப்படும் பாத்திரங்கள், மின்சாதனங்கள் போன்றவற்றை வாங்கியுள்ளனர்.

தற்போது இக்குழுவினர் தங்களின் தொழிலில் மிகவும் உத்வேகத்துடன் ஈடுபட்டு அதிக அளவில் பொருட்களைத் தயாரித்து, விற்பனை செய்வதன் மூலம் வருவாய் பெற்று வருகின்றனர்.

உயிர் காக்கும் ரத்த தானம்

நம் உடலில் உள்ள ஒரே திரவ உறுப்பு ரத்தம். 'நீரின்றி அமையாது உலகு' என்பதைப் போல ரத்தமின்றி செயல்படாது உடல். நம் உடலின் அனைத்து உறுப்புகளும் சீராக இயங்க ரத்தம் அவசியம். ஆக்சிஜனை அனைத்து உறுப்புகளுக்கும் எடுத்துச்செல்லும் முக்கிய பொருளாக நம் ரத்தம் இருக்கிறது. ரத்த தானம் செய்வதால் ஏற்படும் நன்மைகள், யார் செய்யலாம், யார் செய்யக் கூடாது போன்ற விபரங்களை அறிந்து கொள்வோம் வாருங்கள்.

பரிசோதனைகள்

ரத்த தானத்துக்கு முன்னரும் பின்னரும்...

- ரத்தம் கொடுப்பதற்கு முன்னர், ரத்தப் பிரிவு, ரத்த அழுத்தத்தின் அளவு, உடலின் வெப்பநிலை மற்றும் ஹீமோகுளோபின் போன்றவை பரிசோதிக்கப்படும்.
- ரத்த தானத்துக்குப் பின்னர், டெங்கு, மலேரியா, டைஃபாய்டு, ஹெப்படைட்டிஸ், எச்.ஐ.வி., எய்ட்ஸ் போன்றவை உள்ளனவா எனப் பரிசோதிக்கப்படும். பரிசோதனையின் முடிவுகளைப் பொறுத்து அவற்றின் பயன்பாடுகள் மாறும்.

நன்மைகள்...

ரத்த தானம் செய்வதால் பலன் பெறுவது மற்றவர் மட்டுமல்ல... நாமும்தான். உடலில் இயற்கையாகப் புதிய ரத்தம் உற்பத்தியாகும். ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு சீராக இருக்க உதவும். மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பும் குறையும். உடலில் அதிக அளவில் உள்ள இரும்புச்சத்து சமன் செய்யப்படும்.

ரத்த தானம் யாரெல்லாம், எப்போதெல்லாம் செய்யலாம், செய்யக் கூடாது!

- 45 கிலோவுக்கு மேல், 18 முதல் 60 வயது வரை உள்ள அனைவரும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ரத்த தானம் செய்யலாம்.
- மாதவிடாய்க் காலங்களில், கர்ப்பக் காலங்களில் உள்ள பெண்கள் செய்யக் கூடாது.
- பாலூட்டும் தாய்மார்கள் செய்யக் கூடாது.
- மது அருந்தியவர்கள், புகைப் பழக்கம் உள்ளவர்கள் செய்யக் கூடாது.
- ஏதேனும் தொற்றுநோய் உள்ளவர்கள், காய்ச்சலில் இருப்பவர்கள்... என நோய்வாய்ப்பட்டவர்கள் செய்யக் கூடாது.
- 18 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள், 45க்கும் கீழ் எடை உள்ளவர்கள், ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக உள்ளவர்கள் செய்யக் கூடாது.
- எய்ட்ஸ், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், வலிப்பு, அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் செய்யக் கூடாது.

ரத்த தானம் செய்யும்போது செய்யவேண்டியவை, செய்யக் கூடாதவை!

- ரத்த தானம் செய்ய விரும்புபவர்கள், மது மற்றும் புகைப்பழக்கத்தைத் தவிர்ப்பது நல்லது. புகைப் பழக்கம் உள்ளவர்கள், புகைபிடித்து மூன்று மணி நேரத்துக்குப் பிறகு ரத்த தானம் செய்யலாம்.
- உடலுக்குத் தேவையான அளவு இரும்புச்சத்து அளிக்கும் உணவுகளை உண்ண வேண்டும்.
- ரத்தம் கொடுப்பதற்கு முன்னர் சீரான தூக்கம் அவசியம்.
- ரத்தம் கொடுப்பதற்கு முன்னர் சிறிதளவு தண்ணீர் அல்லது பழச் சாறு அருந்தலாம்.
- ரத்தம் கொடுக்கும்போது, இறுக்கமாக அல்லாமல் தளர்வான உடைகளை அணியலாம்.
- ரத்தம் கொடுப்பதற்கு முன்னர், மனஅமைதியுடன் இருக்க வேண்டும். மெல்லிய இசையை ரசிக்கலாம்.
- ரத்தம் கொடுத்த பின்னர், பழச்சாறு, ஹெல்தி ஸ்நாக்ஸ் அல்லது ஆரோக்கியமான பச்சைக் காய்கறிகள் மற்றும் பழங்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்ளலாம்.
- ரத்தம் கொடுத்த அடுத்த 24 மணி நேரத்துக்கு மது அருந்தக் கூடாது. திரவ உணவை எடுத்துக்கொள்ளலாம்.
- ரத்தம் கொடுத்த பின்னர், எடை அதிகம் உள்ள பொருள்களைத் தூக்கக் கூடாது. கடுமையான உடற்பயிற்சி செய்யக் கூடாது.
- ரத்தம் கொடுத்த அடுத்த 24 மணி நேரத்துக்கு கடினமான செயல்கள் எதுவும் செய்யக் கூடாது. வியர்வையை உண்டாக்கும் செயல்கள், விளையாட்டு, பணி போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

நீங்கள் செய்யும் ரத்த தானம் பிற உயிர்களைக் காக்க உதவுகிறது. எனவே ரத்த தானம் செய்து, பிற உயிர்களைக் காக்கும் பெருமையினைப் பெறுங்கள்.

முற்றக் கச்சேரி 2.0



அன்புள்ள முற்றம் வாசகர்களே,

சுய உதவிக் குழுவின் ஊக்குநரான மதி, உறுப்பினர்களான கீதா, சந்திரா ஆகியோரிடையே நடைபெறும் உரையாடல்களும், உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு ஊக்குனர் அளிக்கும் விளக்கங்களும் இந்த முற்றக் கச்சேரி 2.0ல் மீண்டும் இடம் பெறுகிறது. இது உங்களுக்கு மிகவும் சுவாரஸ்யமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரியை ஆரம்பிக்கலாமா...!

இடம் : **குழு அலுவலகம்,**

பாத்திரங்கள் : **ஊக்குனர் மதி, உறுப்பினர்கள் கீதா, சந்திரா**

கீதா : மதி அக்கா நல்லாயிருக்கீங்களா?

மதி : நல்லா இருக்கிறேன் கீதா... சந்திரா வரவில்லையா?

கீதா : இதோ வந்தாச்சு அக்கா...

சந்திரா : வணக்கம் மதி அக்கா...

மதி : வா சந்திரா, என்ன விஷயமா இரண்டு பேரும் வந்திருக்கீங்க?

கீதா : இயற்கை முறையில விளைவிக்கிற வேளாண் பொருட்களை விற்பனை செய்ய கண்காட்சி நடக்கிறதா சொன்னீங்களே அக்கா. அதுபற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

மதி : அட நம்ம வேளாண் பொருட்கள் விற்பனைக் கண்காட்சிய பத்தித் தெரியுமா உங்களுக்கு?

சந்திரா : வேளாண் கண்காட்சியா? அப்படின்னா என்ன அக்கா?

கீதா : அதப் பத்தி கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்.

மதி : நம்ம அன்னை தெரசா மகளிர் வளாகத்துலதான் இந்தக் கண்காட்சி நடக்குது.

கீதா : அந்த கண்காட்சியில என்ன விற்பனை செய்யறாங்க?

மதி : விவசாயத்துல ஈடுபட்டு இயற்கையான முறையில பொருட்களை விளைவிக்கிற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவங்க தங்கள் விளைவிக்கிற பொருட்களை இந்தக் கண்காட்சியில விற்பனை செய்றாங்க.

சந்திரா : எப்ப இந்தக் கண்காட்சி நடக்குது?

மதி : ஒவ்வொரு மாசமும் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமையில இந்தக் கண்காட்சி நடக்குது.

கீதா : அங்க என்னென்ன பொருட்கள் விற்பனை செய்யறாங்க?

மதி : இயற்கையான முறையில விளையிற காய்கள், பழங்கள், கீரைகள் போன்றவை விற்பனை செய்யறாங்க.

சந்திரா : இந்தப் பொருட்கள மட்டும்தான் விற்கிறாங்களா?

மதி : இதுமட்டுமல்ல. சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கிற எண்ணெய், நாட்டு சர்க்கரை, முந்திரி, மிளகு, சத்து மாவுகள், தேன், ஊறுகாய் வகைகள், மூலிகைப் பொருட்கள், சமையல் பொருட்கள், இயற்கை உரங்கள், பனை ஓலை பொருட்கள், சணல் பொருட்கள், தின்பண்டங்கள், பிளாஸ்டிக்கிற்கு மாற்றான பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் என நிறையப் பொருட்கள் விற்பனை செய்யறாங்க.

கீதா : பொருட்கள மட்டும்தான் விற்பனை செய்யறாங்களா?

மதி : பாரம்பரியமும், சுவையும் நிறைந்த உணவுகளும் விற்பனை செய்யறாங்க.

சந்திரா : இது மட்டும்தானா?

மதி : என்ன அப்படி கேட்டுட்ட சந்திரா? விற்பனை மட்டுமில்லை மாடித்தோட்டம் அமைப்பது, உணவு தயாரிப்பது, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களைக் கொண்டு பல்வேறு பொருட்கள் தயாரிப்பது போன்ற பயிற்சிகளும் தராங்க. பயிற்சிக்குப் பிறகு சான்றிதழும் தராங்க.

கீதா : அப்படியா அக்கா? நாமும் நாம உற்பத்தி செய்யற பொருட்கள இனி அங்க விற்பனை செய்ய எடுத்துட்டு போலாமா?

மதி : தாராளமா செய்யலாம். மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு நம்ம தமிழ்நாடு அரசும், மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் பல திட்டங்களை செயல்படுத்திட்டு வராங்க, அதுல இதுவும் ஒன்னு.

சந்திரா : சரிக்கா நாங்க வரோம்.

மதி : போயிட்டு வாங்க. அடுத்த முறை நாம் வேற தலைப்புல நாம பேசலாம்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

சுவையான சைவ பிரியாணி

தேவையான பொருட்கள்: பாசுமதி அரிசி 2 கப், கேரட், பீன்ஸ், பச்சை பட்டாணி, உருளைக் கிழங்கு தலா 100 கிராம், பச்சை மிளகாய் 4, தயிர் 3 டீஸ்பூன், காஷ்மீர் மிளகாய்த் தூள் 1 டீஸ்பூன், பட்டை 2, லவங்கம் 4, ஏலக்காய் 2, ஜாதிக்காய்த் தூள் சிறிதளவு, வெங்காயம், தக்காளி தலா 2, இஞ்சி பூண்டு விழுது ஒன்றரை டீஸ்பூன், புதினா, கொத்தமல்லி சிறிதளவு, எண்ணெய், உப்பு-தேவையான அளவு

செய்முறை: பாசுமதி அரிசியை பத்து நிமிடம் ஊற வையுங்கள். குக்கரில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும், எண்ணெய் காய்ந்ததும் பட்டை, லவங்கம், ஏலக்காய், ஜாதிக்காய் போட்டுப் பொரித்து, பின்னர் நீளவாக்கில் நறுக்கிய வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்குங்கள். அதில் இஞ்சி பூண்டு போட்டு வதக்கி பச்சை மிளகாய், தக்காளி சேர்த்து வதக்குங்கள். பிறகு கொத்தமல்லி, புதினாவைச் சேர்த்து காய்கறிகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்குங்கள். மிளகாய்த் தூள், தயிர் சேர்த்து நன்றாக வதக்கி, ஊற வைத்த அரிசியை தண்ணீர் வடித்துச் சேர்த்து மெதுவாகக் கிளறுங்கள் நான்கு கப் தண்ணீரை வேறொரு பாத்திரத்தில் கொதிக்கவைத்து அதை அரிசி கலவையில் ஊற்றிக் கிளறி குக்கரை மூடிவிடுங்கள். சிறு தணலில் பத்து நிமிடம் வேகவைத்து எடுத்தால் சுவையான பிரியாணி தயார். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பிச் சாப்பிடும் உணவு இது.

மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களைப் பெற்ற மகளிரின் வெற்றிக் கதைகள்

மகளிரின் முன்னேற்றத்தில் அளவற்ற அக்கறைக் கொண்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் தங்களது பணியிடங்களுக்குச் செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்தியத் திருநாட்டிலேயே முதன்முறையாக 'மகளிர் தங்களது பணியிடங்களுக்கு எளிதில் செல்லும் வகையில், 50 சதவிகித மானியத்தில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும்' உன்னதத் திட்டத்தினை அறிவித்திருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், பதவியேற்றவுடன் 'மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தினை' செயல்படுத்திடும் கோப்பில் முதல் கையெழுத்திட்டு, ஆண்டிற்கு ஒரு இலட்சம் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், உழைக்கும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றிட, சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட ஆலோசனைகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து 'உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா' புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 70வது பிறந்த தினமான 24.02.2018 அன்று, சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கலந்து கொண்டு, உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி, இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அம்மா இருசக்கர வாகனங்களை பெற்ற மகளிர், தங்களின் அன்றாட பணிகளுக்கு இந்த வாகனங்கள் பெரிதும் உதவிகரமாக இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர். அம்மா இருசக்கர வாகனங்களைப் பெற்ற பயனாளிகள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர்.

என் பெயர் சித்ரா, நான், திண்டுக்கல் மாநகராட்சி, பேகம்பூர் பகுதியில் வசித்து வருகின்றேன். B.Com., படித்துள்ள நான் மருந்து விற்பனை கடையில் பணிபுரிந்து வருகின்றேன். பணியாற்றும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் குறித்து மகளிர் திட்ட பணியாளர் மற்றும் பத்திரிக்கை செய்தியின் வாயிலாக அறிந்து கொண்ட நான் மானிய விலையில் அம்மா இரு சக்கர வாகனம் வாங்குவதற்கான விண்ணப்பத்தினை திண்டுக்கல் மாநகராட்சியில் சமர்ப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானிய விலையில் எனக்கு வாகனம் வழங்கப்பட்டுள்ளது. நான் இருசக்கர வாகனத்தை வாங்குவதற்கு முன்பாக மினி பேருந்து மற்றும் ஷேர் ஆட்டோவில் சிரமப்பட்டு பயணம் செய்து நான் பணிபுரியும் இடத்திற்கு சென்று வந்தேன். இதனால் சில வேளைகளில் உரிய நேரத்திற்கு பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. இரு சக்கர வாகனம் வாங்கிய பின் குறித்த நேரத்தில் வேலைக்கு செல்ல முடிகிறது. காலையில் வீட்டு கடமைகளை அவசரம் இல்லாமல் செய்ய முடிகிறது. இரு சக்கர வாகனம் இருப்பதால் பயண நேரம் மிச்சமாகிறது. இதனால் குடும்ப கடமைகளில் அதிக கவனம் செலுத்த முடிகிறது. எவ்வித மன நெருக்கடிக்கும் ஆளாகாமல் என்னுடைய கடமைகளை மகிழ்ச்சியுடன் செய்ய முடிகிறது. எனக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கிய தமிழக அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் ஒன்றியம், அழிஞ்சல்பட்டு ஊராட்சியைச் சேர்ந்தவரான எஸ். ஜரினா, மாமண்டூர் ஊராட்சியில் வங்கித் தொடர்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். மாற்றுத் திறனாளியான இவர் தினமும் பணிக்கு செல்வதற்கு பிறரது துணையை நாட வேண்டியிருந்தது. இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தார். இவரது வருமானம் இவரின் குடும்பத்தினருக்கு பெரும் உதவியாக இருந்தது. இந்நிலையில் அம்மா இருசக்கர வாகன திட்டத்தினை அறிந்த ஜரீனா அம்மா வாகனம் வேண்டி விண்ணப்பித்தார். இவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மூன்று சக்கர வாகனம் வாங்க மான்ய தொகை ரூ. 31,250/-வழங்கப்பட்டது. மானிய விலையில் அம்மா வாகனம் வாங்கிய ஜரினா தற்பொழுது பிறரது உதவியின்றி பணிக்கு மற்றும் பொது இடங்களுக்கு சென்று வருகிறார். மானிய விலையில் அம்மா வாகனம் வாங்கப் பேருதவியாக இருந்த தமிழ்நாடு அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் ஜரினா.

என் பெயர் யுவராணி, நான் வேலூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், சின்னாசிநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த நான் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கள அளவிலான ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் பணியாற்றும் இடம் எனது வீட்டிலிருந்து 17 கி.மீ. தூரம் உள்ளதால் மிகவும் சிரமத்துடனும் காலதாமதமாகவும் பணிக்குச் சென்று வந்தேன். சொந்தமாக வாகனம் வாங்க வசதியில்லாமல் சிரமப்பட்டு வந்தேன். இந்நிலையில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் குறித்து அறிந்து கொண்ட நான் எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வேண்டி விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு மானிய விலையில் நான் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் எனது பணிக்கு சிரமமின்றி சரியான நேரத்தில் சென்று வருகிறேன். எனக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் பெயர் ஹேமலதா, திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி வட்டாரத்தில் உள்ள பருத்தியூர் ஊராட்சியில் வசித்து வரும் நான், கடந்த 5 வருடங்களாக ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுனராக பணிபுரிந்து வருகிறேன். ஊராட்சியின் திட்ட செயல்பாடுகள், சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள் மற்றும் நிதி இணைப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட அனைத்து குக்கிராமங்களுக்கும் செல்ல வேண்டியிருந்தது. சில இடங்களுக்கு நடந்தும், பின்னர் சைக்கிளில் செல்லவும் வேண்டியிருந்ததால் எனக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. எனது பணியிலும் சுணக்கம் ஏற்பட்டது. இந்நிலையில் என்னைப் போன்ற பெண்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் நம் தமிழ்நாடு அரசு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தை அறிவித்தது. நானும் மானிய விலையில் இருசக்கர வாகனம் வாங்க விண்ணப்பித்தேன். தற்போது நான் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வாங்கியுள்ளேன். பல்வேறு இடங்களுக்கும் எளிதில் சென்று எனது பணிகளை சிறப்பாக செய்து வருகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், இதற்கு காரணமான தமிழ்நாடு அரசிற்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றிக் கதைகள்

விருதுநகர் மாவட்டம், ரோசல்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் பா. ராஜலட்சுமி (க/பெ. ஜாய் ஜெனோரல்) என்கிற நான் வங்கி ஒருங்கிணைப்பாளராக பணி புரிந்து வருகிறேன். எங்கள் ஊரில் இருந்து நான் பணியாற்றும் இடத்திற்கு செல்ல பஸ் நிறுத்தத்திற்கு 4 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு சென்றால்தான் பஸ் கிடைக்கும். அதனால் பணிக்குச் செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. இருசக்கர வாகனம் இருந்தால் குறிப்பிட்ட நேரத்தில் பணிக்குச் செல்ல முடியும். ஆனால் இருசக்கர வாகனம் வாங்க எங்களிடம் போதுமான பொருளாதார வசதியில்லை. இந்நிலையில் பணியாற்றும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்குவது குறித்த விபரத்தை அறிந்த நான் அதற்கு விண்ணப்பித்தேன். இப்பொழுது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வாங்கினேன். வாகனம் வாங்கியதால் இப்பொழுது எனக்கு வேலைக்குச் செல்ல மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனக்கு பெரிதும் உதவிய மகளிர் திட்டத்திற்கு மிக்க நன்றி.

எனது பெயர் தேவி, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், மரக்குளம் ஊராட்சி சின்ன உடப்பங்குளம் கிராமத்தில் வசித்து வரும் நான், மகளிர் திட்டம் மூலம் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் கணக்காளராக பணியாற்றி வருகின்றேன். கடன் வசூல் மற்றும் குழுவின் பணிகளைச் செய்ய கிராமங்களுக்கு செல்ல பஸ் வசதி இல்லாதததால் நான் தினசரி நீண்ட தொலைவிற்கு நடந்து செல்ல வேண்டியிருந்தது. இது எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. சொந்தமாக இரண்டு சக்கர வாகனம் வாங்கும் அளவிற்கு என்னிடம் பணம் இல்லை. இந்த நேரத்தில் தான் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பணி செய்யும் மகளிருக்கு 50% மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். நான் அம்மா இருசக்கர வாகனம் வாங்கும் திட்டத்தில் விண்ணப்பம் செய்து மானியத்துடன் கூடிய இருசக்கர வாகனத்தை வாங்கியுள்ளேன். இப்பொழுது எனது பணிகளுக்கு வண்டியில் சென்று வர இலகுவாக உள்ளது. இதற்கு காரணமான தமிழ்நாடு அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், 4, திரவியபுரம் 6வது தெருவில் வசித்து வரும் என் பெயர் சத்திய சிவரஞ்சனி, நான் தனியார் பள்ளியில் பணியாற்றி வருகிறேன். நான் பணியாற்றும் இடம் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பேருந்துக்காக தினசரி காத்திருந்து செல்ல வேண்டி இருந்ததினால் என்னால் குறித்த நேரத்தில் பணிக்குச் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டேன். இந்நிலையில் அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்தின் கீழ் நான் இருசக்கர வாகனம் வாங்கியதற்கு பின்பு என்னால் எனது பணிக்கு குறிப்பிட்ட நேரத்தில் சென்று வர எளிதாக உள்ளது. மேலும் பணிகளை முடித்த பின்பு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவது, மற்றும் மருத்துவமனைக்குச் செல்வது போன்றவையும் எளிதாக உள்ளது. என் போன்ற மகளிர்களுக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம் பெரிதும் உதவியாக உள்ளது.

சாலையைக் கடக்கும்போது செல்போனைப் பார்க்காதீர்கள்!

என் பெயர் சி. முத்துச்செல்வி, நான் மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் வசித்து வருகிறேன். B.A., (பொருளாதாரம்) இளங்கலை பட்டம் பெற்று, தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் சமுதாய அமைப்பாளராக மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் பகுதியில் களப்பணியாற்றி வருகிறேன். நான் களப்பணியாளர் என்பதால் பல்வேறு இடங்களுக்கும் செல்ல வேண்டியிருந்தது. இருசக்கர வாகனம் இருந்தால் எனது பணிகளை விரைவாகவும் சிறப்பாகவும் செய்ய முடியும் என்று நினைத்திருந்தேன். இந்நிலையில் நமது தமிழக அரசு மானிய விலையில் எனக்கு வழங்கிய அம்மா இருசக்கர வாகனத்தினால், எனது பணியை வேகமாகவும், பாதுகாப்பாப்பாகவும் செய்ய முடிகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், கெண்டையனஅள்ளி ஊராட்சியில் வசிக்கும் என் பெயர் சத்யா (க/பெ. சக்திவேல்). நான் கெண்டையனஅள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் கணக்காளராக கடந்த 5 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். எனது பணி அரசு நல திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதால் பல்வேறு கிராமங்களுக்கும் பேருந்து மற்றும் மிதிவண்டியில் சென்று வருவேன். இருப்பினும் குறிப்பிட்ட நேரத்தில் தகவல்களை கொண்டு சேர்க்க முடியவில்லை. தற்பொழுது தமிழ்நாடு அரசு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தில் ரூ. 25,000/ மானியத்தில் இருசக்கர வாகனம் பெற்றுள்ளேன். இருசக்கர வாகனம் உள்ளதால் தற்போது அரசு நலத் திட்டங்களை கிராம மக்களிடம் எளிதில் கொண்டு சேர்க்க முடிகிறது. எனக்கு இருசக்கர வாகனம் வழங்கிய தமிழ்நாடு அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நம்மால் முடியும் நம்மால் முடியும்! பிளாஸ்டிக்கை ஒழிக்க நம்மால் முடியும்!!
- பிளாஸ்டிக்கை எரிக்காதே! கேன்சரை உருவாக்காதே!!
- உருவாக்குவோம் உருவாக்குவோம்! பிளாஸ்டிக் இல்லா உலகை உருவாக்குவோம்!!
- குடிகுடியைக் கெடுக்கும்! பிளாஸ்டிக் எல்லாவற்றையும் கெடுக்கும்!!
- நீர்வளம் காக்க... பிளாஸ்டிக்கை வெறுப்போம்!!
- பிளாஸ்டிக் உபயோகம்... கேன்சர் உருவாக்கம்!!
- பிளாஸ்டிக் இல்லை எனில் நமக்கு தொல்லை இல்லை
- பிளாஸ்டிக் உபயோகம் குறைப்போம். உலக உயிரின் நலன் காப்போம்
- பிளாஸ்டிக்கை ஒழிப்போம், மண் வளம் காப்போம்

அழகுக் குறிப்புகள்

அழகு பெற பல செயற்கை முறைகளை பயன்படுத்தி உள்ளோம் ஆனால் அது நமக்கு முழுமையான பலனை தந்ததில்லை. அதற்கு பதிலாக பல பிரச்சனைகள் வந்து நம் அழகை கெடுத்து, மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. எனவே இயற்கை முறையில் முழு உடல் அழகு பெற பல அழகு குறிப்புகள் உள்ளது. அவற்றை பின்பற்றி வந்தாலே போதும் உடல் முழுவதும் நம் அழகை அதிகரிக்க முடியும். சரி வாங்க உடல் அழகு பெற என்னென்ன அழகு குறிப்புகள் உள்ளது என்று இப்போது நாம் தெரிந்து கொள்வோம் வாங்க...

நகங்களை பராமரிக்க:

தினமும் பாலுடன் கொஞ்சம் பேரிச்சை கலந்து குடித்து வர நகங்கள் கூடுதல் பலமடைவதோடு, நகம் உடைதல் குறையும். மேலும் நகத்திற்கு பாதாம் எண்ணெயை தடவி வர நகம் பளப்பளப்பாக இருக்கும்.

முகம் அழகு பெற :

தினமும் பப்பாளிப் பழத்தை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை குளிர்ந்த நீரால் கழுவ, முகம் பொலிவுடனும். பளப்பளப்பாகவும் இருக்கும். முட்டைக்கோஸ் சாறை முகத்தில் தடவி வர முகச் சுருருக்கம் மறையும். இரவில் படுக்கப் போகும் முன் தேன், குங்குமப்பூ, மஞ்சள் சேர்த்து அரைத்து சாப்பிட்டு வந்தால் உடல் மினுமினுப்பாகும். மேலும் முழு உடல் அழகு பெரும்.

இதழ்களை பராமரிக்க:

நம் வீட்டில் பொதுவாக சமைப்பதற்கு பீட்ருட் அதிகம் வாங்குவோம். அந்த பீட்ருடை ஒரு துண்டு எடுத்து உங்கள் உதட்டில் லிப்ஸ்டிக் போடுவது போல் போட்டு வந்தாலே போதும். உங்கள் உதடு மிகவும் அழகாக இருக்கும்.

சருமத்தை பாதுகாக்க:

ஒரு ஸ்பூன் ஈஸ்ட்டுடன், முட்டைகோஸ் இலையின் சாறினை எடுத்து கலந்து கொள்ளுங்கள். அதில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து சருமம் எங்கும் பூசி வர சூரிய ஒளியால் கருமை அடைந்த தோலின் நிறம் இயற்கை நிறத்திற்கு மாறிவிடும். முன்பு இருந்ததைவிட சருமத்தில் நிறம் சிவப்பாக காட்சியளிக்கும்.

தினமும் அவரி இலையை சுத்தம் செய்து நன்கு உலர்த்தி தூளாக்கி தினமும் 5 கிராம் காலை உணவிற்குப் பின் சாப்பிட்டு வந்தால் உடல் பளபளப்பாக இருக்கும்.

கழுத்தை பராமரிக்க :

கழுத்தை பராமரிக்க சிறிதளவு ரோஸ் வாட்டர், சிறிதளவு வெங்காய சாறு இரண்டு சொட்டு ஆலிவு ஆயில் மற்றும் பயத்த மாவு ஆகியவற்றை கலந்து கழுத்தில் தடவி ஒரு பத்து நிமிடம் கழுத்திலிருந்து தாடையை நோக்கி லேசாக மசாஜ் செய்துவிடுங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்ய நாளடைவில் உங்கள் கழுத்து பகுதியில் இருக்கும் கருப்பு நிறம் மாறி பளபளப்பாக காணப்படும்.

கண்களில் கருவளையம் நீங்க:



கண்களில் இருக்கும் கருவளையம் நீங்க இது தான் சிறந்த வழி. வெள்ளரிக்காய் விதையை காயவைத்து பொடி செய்து அதில் தயிர் சேர்த்து பசைபோல் ஆக்கவும். இந்த பேஸ்டை முகத்தில் தொடர்ந்து போட்டு வர கண்களில் இருக்கும் கருவளையம் மறையும்.

கருப்பு திட்டுகளை நீக்க:

சிலருக்கு முகம், மூக்கு, கன்னம் ஆகிய பகுதிகளில் அசிங்கமாக கருப்பு நிற திட்டுகள் காணப்படும். இதை கிராம புறத்தில் ‘மங்கு’என குறிப்பிடுவார்கள். இவற்றைப் போக்க, ஜாதிக்காய், சந்தனம், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீர் கலந்து நன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். அரைத்த பற்றை முகத்தில் இருக்கும் கருப்பு திட்டுகள் இருக்கும் இடத்தில் பசைப்போல தடவுங்கள். சில முறை இந்த முறையை நீங்கள் கையாண்டால் போதும் முகத்தில் உள்ள அசிங்கமான மங்கு (கருந்திட்டு) மறைந்துவிடும்.

முதன்மைப் பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முதன்மைப் பயிற்றுநர்களுக்கு வட்டார அளவிலான கூட்டமைப்பு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான நிர்வாகப் பயிற்சி மற்றும் சுய உதவிக் குழு நிர்வாகம் மற்றும் புத்தகப் பராமரிப்பிற்கான பயிற்றுநர் பயிற்சி, சென்னை, பெரியமேடு சால்வேசன் ஆர்மி பயிற்சி நிலையத்தில் கடந்த 03.09.2019 மற்றும் 04.09.2019 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திரு. ஜா. சம்பத் பயிற்சியினைத் துவக்கி வைத்து, மாநிலம் முழுவதிலும் இருந்து கலந்து கொண்ட 62 முதன்மைப் பயிற்றுநர்களிடம் கலந்துரையாடினார். அப்போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கங்கள், செயல்பாடுகள் குறித்தும் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான இயக்க மேலாண்மை அலகு ஆகியவற்றைப் பற்றியும் விளக்கிக் கூறியதோடு, இவற்றை மேம்படுத்துவதில் முதன்மைப் பயிற்றுநர்களின் பொறுப்புகள் குறித்தும் விளக்கிக் கூறினார்.

முன்னதாக தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மைய ஒருங்கிணைப்பாளர் திருமதி. காளத்தி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், இந்த இருநாள் பயிற்சியின் நோக்கங்கள் குறித்து விளக்கினார். திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீ பாரதி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மாநில அளவிலான பயிற்றுநர்கள் திரு. மைக்கேல் அன்னராஜ், திரு. காவீ. பழனிச்சாமி, திரு. எம். பன்னீர்செல்வம் ஆகியோர் இந்த இருநாள் பயிற்சியின் கருத்தாளர்களாக இருந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், நாவலூர் திட்டப் பகுதியில் செயல்பட்டு வரும் ‘புதுமைப் பெண்கள்’ சுய உதவிக் குழுவின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை அரங்கு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பாக காஞ்சிபுரம் மாவட்டம், நாவலூர் திட்டப் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கத்தினைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் (TNVRC) வழிகாட்டுதலுடன் நாவலூர் திட்டப் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். அவ்வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் குழுக்களில் ‘புதுமைப் பெண்கள் சுய உதவிக் குழு’வும் ஒன்றாகும். இக்குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு சமையல் மசாலாக்கள், சத்துணவு மாவு போன்றவற்றை சுகாதாரமாகவும் சுவையாகவும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 2019 செப்டம்பர் 6, 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மகளிர் உயிர்ம வேளாண் சந்தையில் ‘புதுமைப் பெண்கள் சுய உதவிக் குழுவினர்’ கலந்து கொண்டு, தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர். புதுமைப் பெண்கள் சுய உதவிக் குழு குழுவினரால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை கண்காட்சிக்கு வந்திருந்த பொதுமக்கள் பெருமளவில் வாங்கிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women’s Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (64,400 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women’s Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

முன்மாதிரி கூட்டமைப்புகள் மற்றும் பாலின சமத்துவம் குறித்து மாநில அளவிலான பயிற்சி

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் வள மேம்பாடு, முன்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் பாலின சமத்துவம் குறித்த மாநில அளவிலான பயிற்சி 19.08.2019 முதல் 21.08.2019 வரை நடைபெற்றது. 19.08.2019 அன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் துவக்க விழா தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்பாட்டில் உள்ள ஈரோடு, திருச்சி, கடலூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களிலிருந்து திட்ட இயக்குநர்கள், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார இயக்க மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் முன்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைப்பதற்கான நோக்கம், அமைப்பு முறை மற்றும் பயன்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன், தமிழ்நாட்டில் செயல்படும் சமுதாயம் சார்ந்த இதர அமைப்புகளின் செயல்பாடுகளும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் பாலின சமத்துவம் குறித்த கருத்தரங்கில் விழுப்புரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, பெரம்பலூர், நீலகிரி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்து திட்ட இயக்குநர்கள் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார இயக்க மேலாண்மை அலகின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் பாலின சமத்துவம், மகளிர் நலன், மகளிர் உரிமைகள், மகளிர் பாதுகாப்புச் சட்டங்கள் குறித்த செயல்பாடுகள் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நிறுவன கட்டமைப்பின் தேசிய மேலாளர் திருமதி. பி. உஷா ராணி அவர்கள், தமிழ்நாட்டிற்கான தேசிய தொடர்பாளர் திருமதி, கவிதா மரியா அவர்கள், உலக வங்கியின் ஆலோசகர் திரு. நரேந்திரர் காண்டே அவர்கள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பாலின சமத்துவ மேலாளர் திருமதி. சீமா பாஸ்கரன் அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திரு. ஜா. சம்பத், திரு. சி. கே. வீரணண், இணை இயக்குநர்கள், தேசிய வள பயிற்றுநர்கள், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் தலைமை அலுவலக அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம்.
சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.